1973 நவம்பர் 19]

* 179 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சட்டம்
The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 26/63-ன்படி எத்தனை விவசாயிகளுக்குப் பட்டா கிடைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 28—2—1973 வரையில் 2,50,112 விவசாயிகளுக்குப் பட்டா கிடைத்திருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு 'வெஸ்ட்' ஆனதற்குப் பிறகு, இனாம்தாரர்கள் கோர்ட்டு மூலம் எவிக்ஷன் செய்து வேறு நபர்களுக்கு அடையோலை போடுகிறார்கள். இந்த நிலைமை திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிறது. ஆகவே இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இனாம்தாரர்கள் வசூல் செய்வதை தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசாங்கத்தில் 'வெஸ்ட்' ஆன பிறகு இனாம்தார் குத்தகை வசூல் செய்ய முடியாது. அவர்கள் மேல் கோர்ட்டுக்குச் சென்று தடை ஆணை பெற்றுவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. திருநெல்வேலியில் உள்ள சில வழக்குகளைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். ஏற்கனவே அரசாங்கத்திடம் 'வெஸ்ட்' ஆகி இருந்தால் எவிக்ஷன் செய்ய முடியாது. குறிப்பிட்ட விவரங்களை உறுப்பினர் அவர்கள் கொடுத்தால் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும். ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்து அதனபேரில் அவருக்குகூட அரசாங்கத்தின் மூலம் பதில் விளக்கமாக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இருந்தாலும், பட்டா யாருக்கு என்று கோர்ட்டில் முடிவு செய்யாமல் இருக்கும்போது, நடுவில் இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்போது நடுவிலே எவிக்ஷன் செய்து வேறு நபருக்கு மாற்றிவிட்டால் மீண்டும் அவர்களுக்குப் பட்டா கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அரசு இதுபற்றி உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உத்தரவுகள் தெளிவாக இருக்கின்றன. ஏற்கனவே, அரசாங்கத்திடம் 'வெஸ்ட்' ஆகி இருந்தால் குத்தகைதாரர்களை வெளியேற்ற முடியாது. மேல் கோர்ட்டில் வழக்கு இருக்குமானால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இயலாது.